# க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2014

## வணிகக் கல்வி I

இரண்டு மணித்தியாலங்கள்

கவனிக்க :

* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
* இலக்கம் 1 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வினாவிற்கு எதிரே காணப்படும் புள்ளிக்கோட்டின் மேல் எழுதவும்.
* இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்கு சுருக்கமான விடையினைக் குறித்த புள்ளிக்கோட்டின் மீது எழுதவும்.

**1.** பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் அடிப்படைக்குரிய மூலகங்களை ஒழுங்குமுறையில் கொண்ட விடைத் தொகுதி,

(1) வாடிக்கையாளர்/இலாபம்/உற்பத்திப் பொருள்/தேவை - விருப்பம்
(2) வாடிக்கையாளர்/தேவை - விருப்பம்/உற்பத்திப் பொருள்/இலாபம்
(3) இலாபம்/உற்பத்திப் பொருள்/தேவை - விருப்பம்/வாடிக்கையாளர்
(4) உற்பத்திப் பொருள்/இலாபம்/வாடிக்கையாளர்/தேவை - விருப்பம்
(5) தேவை - விருப்பம்/இலாபம்/வாடிக்கையாளர்/உற்பத்திப் பொருள் (........)

**2.** பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் சாகிரின் வாகனத்திற்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஒரு சோடி இறப்பர் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இந்நிகழ்வு,

(1) வசதிப்பண்ட வகைகளுக்குரியதாகும். (2) கடைப்பண்ட வகைகளுக்குரியதாகும்.
(3) விஷேடப்பண்ட வகைகளுக்குரியதாகும். (4) வணிகப்பண்ட வகைகளுக்குரியதாகும்.
(5) நாடாப்பண்ட வகைகளுக்குரியதாகும். (........)

**3.** பின்வரும் அட்டவணையில் X, Y ஆகிய நிரல்களில் முறையே உற்பத்தித் துறைகளும் அவற்றின் துணைப்பிரிவுகளும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A விவசாய உற்பத்தி<br><br>B கைத்தொழில் உற்பத்தி<br><br>C சேவை உற்பத்தி | 1. மீன்பிடிக் கைத்தொழில்<br>2. வனவளத் தொழில்<br>3. சுரங்கமறுத்தலும் தயாரிப்புத் தொழிலும்<br>4. போக்குவரத்தும் தொடர்பாடலும்<br>5. மின்சாரம், எரிவாயு, நீர்<br>6. வங்கி, காப்புறுதி ஆதன வியாபாரம் |

X, Y ஆகியவற்றை சரியாக இணைக்கும்பொழுது பெறப்படும் சரியான விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A - 1, 3 B - 2, 5 C - 4, 6 (2) A - 1, 3 B - 2, 4 C - 5, 6
(3) A - 1, 2 B - 3, 5 C - 4, 6 (4) A - 1, 4 B - 2, 3 C - 5, 6
(5) A - 1, 3 B - 2, 6 C - 4, 5 (........)

**4.** வணிகமொன்றின் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பிரிவினர்கள் அவற்றிற்குரிய கருமங்கள் அட்டவணையில் X, Y என காட்டப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A சமூகம்<br>B வாடிக்கையாளர்கள்<br>C உரிமையாளர்கள்<br>D ஊழியர்கள் | 1. ஒருமைப்பாட்டுத் தன்மை<br>2. நியாயமான உழைப்பு<br>3. கழிவுப் பொருள் அகற்றல் முகாமைத்துவம்<br>4. நியாயமான விலை |

X, Y என்பவற்றிற்குச் சரியான விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A - 1 B - 2 C - 3 D - 4 (2) A - 4 B - 3 C - 2 D - 1
(3) A - 2 B - 3 C - 1 D - 4 (4) A - 3 B - 4 C - 2 D - 1
(5) A - 1 B - 2 C - 4 D - 3 (........)

**5.** நிதிக் கொள்கைக்கும், இறைக் கொள்கைகளுக்குமுரிய உருப்படிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - வட்டி வீதம் B - அதிகரித்துச் செல்லும் செலவுக் கட்டுப்பாடு
C - வரியும் தண்டப் பணமும் D - திறந்த சந்தை நடவடிக்கைகள்

இவற்றில் நிதிக் கொள்கைக்கும், இறைக் கொள்கைகளுக்குரிய உருப்படிகளை **ஒழுங்குமுறையாகக்** காட்டும் தொகுதியாக இருப்பது,

(1) A, B யிலும் C, D யிலும் ஆகும். (2) A, C யிலும் B, D யிலும் ஆகும்.
(3) A, D யிலும் B, C யிலும் ஆகும். (4) B, C யிலும் A, D யிலும் ஆகும்.
(5) B, D யிலும் A, C யிலும் ஆகும். (........)

[பக். 2 ஐப் பார்க்க.

**6.** பின்வரும் அட்டவணையில் X நிரலில் நியமங்களது குறியீடுகளும், Y நிரலில் நியமங்களது பெயர்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A ISO 9001 : 2008 | 1. உணவு பாதுகாப்பு முகாமை |
| B ISO 14001 : 2004 | 2. தகவல் பாதுகாப்பு முகாமை |
| C ISO 22000 : 2005 | 3. தொழில் சுகாதாரப் பாதுகாப்பு முகாமை |
| D ISO 27000 | 4. சூழல் முகாமைத்துவ முறைமை |
| E OHSAS 18001 : 2007 | 5. தர முகாமைத்துவ முறைமை |

மேற்காட்டிய தகவல்களை சரியாக இணைப்பதற்குப் பொருத்தமாக இருப்பது

(1) A - 1 B - 2 C - 3 D - 4 E - 5 (2) A - 1 B - 3 C - 4 D - 5 E - 2
(3) A - 5 B - 4 C - 2 D - 1 E - 3 (4) A - 5 B - 4 C - 1 D - 2 E - 3
(5) A - 5 B - 3 C - 4 D - 2 E - 1 (........)

**7.**

| X | Y |
|---|---|
| A அங்கீகார வணிகம் | 1. இலங்கையினுள் வணிக நடவடிக்கைகளைச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| B அரச கம்பனிகள் | 2. மூலதனமின்றி ஆரம்பிக்கப்பட முடியும். |
| C பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | 3. அரச கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும். |
| D விலை குறிக்கப்பட்ட கம்பனிகள் | 4. பங்குச் சந்தையில் பதிவு செய்யப்படும். |
| E கரை கடந்த கம்பனிகள் | 5. வணிகத்தின் பெயர்களது இறைக்கொள்கைக்குட்பட்டது. |

மேலே X நிரலில் வணிக அமைப்புக்களின் வகைகளும் Y நிரலில் அவற்றுடன் தொடர்புடைய கருத்துக்களும் காட்டப்பட்டுள்ளன. இதற்கமைய X, Y என்பவற்றைச் சரியாக இணைக்கும் விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A - 5 B - 3 C - 4 D - 1 E - 2 (2) A - 5 B - 3 C - 2 D - 4 E - 1
(3) A - 5 B - 4 C - 3 D - 1 E - 2 (4) A - 1 B - 2 C - 5 D - 4 E - 3
(5) A - 1 B - 5 C - 2 D - 3 E - 4 (........)

**8.** இலாபமீட்டும் நோக்கம், வரையறுக்கப்படாத பொறுப்புகள், சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து என்பவற்றைக் கொண்ட வணிக அமைப்பு வகைகளை ஒழுங்குமுறையில் கொண்ட சரியான விடைத் தொகுதியாக இருப்பது,

(1) தனியாள் உடமை வணிகம்/பங்குடமை வணிகம்/அரச கூட்டுத்தாபனங்கள்
(2) பங்குடமை வணிகம்/வரையறுக்கப்பட்ட கம்பனிகள்/அரச கம்பனிகள்
(3) பங்குடமை வணிகம்/அரச கூட்டுத்தாபனங்கள்/வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
(4) அரச கூட்டுத்தாபனங்கள்/அரச கம்பனிகள்/பங்குடமை வணிகம்
(5) அரச கூட்டுத்தாபனங்கள்/பங்குடமை வணிகம்/ தனியாள் உடமை வணிகம் (........)

**9.** 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய பங்குகளை வழங்கல், பங்குகளுக்கான அழைப்புக்களை விடுத்தல் என்பவை தொடர்பாகக் கம்பனிகளுக்குக் கிடைத்த அல்லது கிடைக்கப்படவேண்டியதும் செலுத்தப்பட வேண்டியதுமான மொத்தப் பணத்தொகையின் பெறுமதி,

(1) பங்கு மூலதனமாகும். (2) வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகும்.
(3) இழிவுப் பங்களிப்புப் பெறுமதியாகும். (4) கூறப்பட்ட மூலதனமாகும்.
(5) தொடக்கப் பங்கு மூலதனமாகும். (........)

**10.** மின்சார இயலளவு 50 கிலோ வாட்ஸ் அம்பியரை விடக் குறைவாகப் பயன்படுத்தப்படும் வணிகங்கள் இலங்கையில் சிற்றளவு வணிகங்களாகும் எனும் நியதிகளினடிப்படையில் சிற்றளவு வணிகங்களை வகைப்படுத்திய நிறுவனம்,

(1) கைத்தொழில் அபிவிருத்திச் சபையாகும். (2) சிறிய கைத்தொழிற் திணைக்களமாகும்.
(3) குடிசனப்புள்ளிவிபரத் திணைக்களமாகும். (4) இலங்கை மத்திய வங்கியாகும்.
(5) கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களமாகும். (........)

**11.** பணத்தின் பண்புகளும், தொழிற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

A - சிறிய அலகுகளான பிரிபடக்கூடிய தன்மை. B - மாற்றூடகமாகத் தொழிற்படல்.
C - நிலையான பாதுகாப்புத்தன்மை. D - ஓரினத்தன்மை கொண்டது.
E - பெறுமான அளவீடொன்றாக இருத்தல். F - பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாக இருத்தல்.

இவற்றில் பணத்தின் பண்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியாக இருப்பது,

(1) A, B, F (2) A, C, D (3) B, C, D (4) B, E, F (5) C, D, E (........)

**12.** காப்புறுதியுடன் தொடர்புடைய அடிப்படைக் கோட்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - காப்புறுதி செய்யும் உரிமை. B - உச்ச நம்பிக்கை. C - இழப்பீட்டுத்தத்துவம்.
D - பங்களிப்பு. E - பதிலாள் வைப்பு. F - அண்மிய காரணி.

ஆயுட்காப்புறுதியுடன் தொடர்புடைய அடிப்படைக் கோட்பாடுகளை மட்டும் உள்ளடக்கிய சரியான விடைத் தொகுதியாவது,

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) A ,B, F (5) A D, E (........)

/பக். 3 ஐப் பார்க்க.

**13.** பண்டங்களைக் கொண்டுசெல்லும்போது வணிகரொருவர் கருத்திற் கொள்ளவேண்டிய முக்கிய காரணிகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

A - கிரயம். B - வசதி. C - இயலளவு
D - சக்தி. E - தரிப்பிடம் F - பாதுகாப்பு

(1) A, B, F (2) A, C, E (3) A, C, F (4) A, D, E (5) A, E, F (........)

**14.** வெளிநாட்டு வியாபார விருத்திக்கு எதிராகப் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அக்காரணிகளுள் சட்ட ரீதியான தடையொன்றாக **கருத முடியாதது**

(1) செலாவணிக் கட்டுப்பாடு. (2) சுங்கச் சட்டதிட்டங்கள். (3) இறக்குமதிக்குத் தடை விதித்தல்.
(4) மொழிரீதியான வேறுபாடுகள். (5) சுங்கக் கட்டணம். (........)

**15.** கீழே X, Y நிரல்களைக் கொண்ட அட்டவணையில் முறையே முகாமைத்துவக் கருமங்களும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A திட்டமிடல் | 1. மாறிகளை இனம் காணல். |
| B ஒழுங்கமைத்தல் | 2. அதிகாரங்களை ஒப்படைத்தல். |
| C நெறிப்படுத்தல்/ செயற்படுத்தல் | 3. தலைமைத்துவம். |
| D கட்டுப்பாடு | 4. உபாய வழிமுறைகளை உருவாக்கல். |

X யையும் Y யையும் இணைக்கும்போது சரியான விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A - 4 B - 2 C - 4 D - 3 (2) A - 1 B - 2 C - 3 D - 4
(3) A - 3 B - 2 C - 4 D - 1 (4) A - 4 B - 2 C - 3 D - 1
(5) A - 4 B - 3 C - 2 D - 1 (........)

**16.** தீர்மானமெடுக்கும் அதிகாரங்களை, கீழ்மட்டப் பதவிகளை வகிக்கின்ற அதிகாரிகளுக்கு ஒப்படைத்தலும், தீர்மானமெடுக்கும் அதிகாரங்களை மேல்மட்ட முகாமைத்துவத்திடம் வைத்திருத்தலையும் **ஒழுங்கு முறையாக** இனம் காட்டும் விடையாக அமைவது

(1) மையப்படுத்தப்பட்டது பன்முகப்படுத்தப்பட்டது எனவாகும்.
(2) பன்முகப்படுத்தப்பட்டது மையப்படுத்தப்பட்டது எனவாகும்.
(3) மையப்படுத்தப்பட்டது திணைக்களப்படுத்தப்பட்டது எனவாகும்.
(4) திணைக்களப்படுத்தப்பட்டது மையப்படுத்தப்பட்டது எனவாகும்.
(5) கட்டுப்பாட்டுவெளி, மையப்படுத்தப்பட்ட முறை எனவாகும். (........)

**17.** வணிக அமைப்பொன்று வீண்விரயங்களின்றி குறைந்த கிரயத்தில் வளங்களைப் பயன்படுத்துதலைக் குறிப்பிடுவது,

(1) விளைதிறன் கொண்டதெனவாகும். (2) வினைதிறன் கொண்டதெனவாகும்.
(3) செயற்றிறன் கொண்டதெனவாகும். (4) உற்பத்தித்திறன் கொண்டதெனவாகும்.
(5) திறன் விருத்தி கொண்டதெனவாகும். (........)

**18.** "யசோதரா" வணிகத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட வருடாந்த உற்பத்தி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| விற்பனை அலகுகளின் எண்ணிக்கை | 12 000 |
| மொத்த நிலையான கிரயம் | ரூ. 2 400 |
| அலகொன்றிற்கான விற்பனை விலை | ரூ. 60 |
| அலகுக்கான கிரயம் - நேர் பொருள் | ரூ. 20 |
| - நேர் கூலி | ரூ. 12 |
| மாறும் பொது மேந்தலைக் கிரயம் | ரூ. 12 |
| நிலையான பொது மேந்தலைக் கிரயம் | ரூ. 6 |

இவ்வுற்பத்தியின் சமன்பாட்டு அலகுத் தொகையாக இருப்பது,

(1) 40 (2) 48 (3) 50 (4) 80 (5) 85 (........)

**19.** பொருளாதாரக் கட்டளையின் அளவினைக் கணிப்பீடு செய்வது,

(1) பேணல் கிரயத்தினையும், மொத்தக் கிரயத்தினையும் இழிவுபடுத்திக் கொள்வதற்காகும்.
(2) மொத்த இருப்புக் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்கும், மொத்தக் கேள்வியை அறிந்து கொள்வதற்குமாகும்.
(3) இருப்பை விலை இடுவதற்கும், மொத்தக் கேள்வியை அறிந்து கொள்வதற்குமாகும்.
(4) இருப்பை விலை இடுவதற்கும், கட்டளைக் கிரயத்தை இழிவுபடுத்திக்கொள்வதற்குமாகும்.
(5) இருப்புப் பேணல் கிரயத்தையும், கட்டளைக் கிரயத்தையும் இழிவுபடுத்திக்கொள்வதற்குமாகும். (........)

**20.** உற்பத்தி நிறுவனமொன்றின் தகவல்களில் சில பின்வருமாறு,

| | |
|---|---|
| வருடாந்த கேள்வி அலகுகளின் எண்ணிக்கை | 20 000 |
| ஒரு கட்டளையொன்றிற்கான கிரயம் | ரூ. 160 |
| ஒரு அலகொன்றின் வருடாந்த களஞ்சியப்படுத்தல் கிரயம் | ரூ. 10 |

பொருளாதாரக் கட்டளைத் தொகையாக இருப்பது அலகுகளில்,

(1) 400 (2) 800 (3) 1 000 (4) 1 600 (5) 2 000 (........)

[பக். 4 ஐப் பார்க்க.

**21.** பின்வரும் தகவல்களில் விலையிடலின் நோக்கத்தை மாத்திரம் கொண்டுள்ள விடையினைத் தெரிவு செய்க.

A - சந்தையில் நிலைத்திருத்தல்.
B - சந்தையில் தனது பங்கினை உச்சப்படுத்திக்கொள்ளல்.
C - கிரயத்தை மதிப்பிடல்.
D - நிகழ்கால இலாபத்தை உச்சப்படுத்திக்கொள்ளல்.
E - பண்டத்திற்கான கேள்வியை எதிர்வுகூறல்.
F - சந்தையின் சாரத்தினை (இலாபத்தினை) உறிஞ்சிக் கொள்ளல்.

(1) A, B, C, D (2) A, B, D, F (3) A, C, D, E (4) A, D, E, F (5) B, C, D, F (........)

**22.** விற்பனையாளர்களினால் வாடிக்கையாளர் சந்தையைத் துண்டமாக்கல் (தொகுதிகளாக்கல்) செய்வதற்காகப் பயன்படுத்தும் நுகர்வோரின் பண்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - பால் நிலை
B - வருமானம்
C - குடும்பமொன்றின் பருமன்
D - வாழ்க்கைப் போக்கு
E - ஆளுமை
F - தொழில்

இவற்றுள் சமூக விஞ்ஞான ரீதியான காரணிகளை மட்டும் சரியாகக் காட்டும் விடையாக இருப்பது,

(1) A, B, C, D (2) A ,B, C, E (3) A, B, C, F (4) A, C, D, E (5) B, C, D, E (........)

**23.** நிதி விகிதங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன,

A - நடைமுறை விகிதம்
B - துரித விகிதம்
C - நிலையான சொத்துக்களின் புரள்வு விகிதம்
D - கடன் உரிமை விகிதம்
E - காசு விகிதம்
F - கால அளவீடு

இவற்றுள் திரவத்தன்மை விகிதங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியாக இருப்பது,

(1) A, B, C, D (2) A ,B, C, F (3) A, B, E, F (4) B, C, D, E (5) A, D, E, F (........)

**24.** நிதி உபகரணங்களை வகைப்படுத்தும் அடிப்படைகளும் சந்தைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| ‘X’ | ‘Y’ |
|---|---|
| நிதி உபகரணங்களின்,<br>1. முதிர்வு காலத்தினடிப்படையில்<br>2. தோற்ற அடிப்படையில்<br>3. தன்மையினடிப்படையில்<br>4. அமைப்பு ரீதியிலான வகையில் | A நடுவர் சந்தை<br>B ஏலச் சந்தை<br>C பணச் சந்தை<br>D மூலதனச் சந்தை<br>E முதலாந்தரச் சந்தை<br>F இரண்டாந்தரச் சந்தை<br>G கடன் கருவிச் சந்தை<br>H உரிமை உபகரணச் சந்தை |

சரியாக இணைப்பட்டுள்ள தொகுதியாக இருப்பது,

(1) 1 A B, 2 C D, 3 E F, 4 G H
(2) 1 C D, 2 A B, 3 E F, 4 G H
(3) 1 E F, 2 A B, 3 C D, 4 G H
(4) 1 G H, 2 C D, 3 E F, 4 A B
(5) 1 C D, 2 E F, 3 G H, 4 A B (........)

**25.** நிதிக் கருவிகளுக்குரிய பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - முதிர்ச்சித்தன்மை கொண்டது
B - வட்டி வீதம்
C - உத்தரவாதத் தன்மை
D - உரிமைத்துவம்
E - நம்பகத் தன்மை
F - மீட்கத்தக்க தன்மை

மேற்காட்டிய பண்புகளில் கம்பனித் தொகுதிக் கடன்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பண்புகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) A, B, C, D (2) A ,B, C, F (3) B, C, D, E (4) C, D, E, F (5) A, D, E, F (........)

**26.** ஊழியர்களின் ஈர்ப்புச்செய்யும் செயன்முறைகளுக்குரிய கருமங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

A - தொழில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்.
B - ஈர்ப்புச் செய்வதற்கான காரணிகளை இனம்காணல்.
C - அக, புற மூலங்களைத் தெரிவுசெய்து கொள்ளல்.
D - தொழில் வெற்றிடங்களை இனங்காணல்.
E - தொழிலுக்குரிய காரணிகளை இனங்காணல்.
F - ஈர்ப்புச் செய்வதற்கான முயற்சியை மதிப்பிடல்.
G - செயற்படுத்துதல்.

மேற்காட்டிய கருமங்களின் சரியான ஒழுங்குமுறையாக அமைவது,

(1) A, C, B, E, D, F, G (2) A, B, E, C, G, B, F (3) D, E, G, F, A, C, B
(4) D, E, B, A, C, G, F (5) A, D, B, F, C, E, G (........)

[பக். 5 ஐப் பார்க்க.

**27.** மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கருமங்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - எதிர்காலத்தில் ஊழியத் தேவையினை அறிந்து கொள்ளல்.
B - உபாய முறையிலான திட்டங்களைத் தயாரித்தல்.
C - தொழிலுக்குரிய கருமங்களை இனங்காணல்.
D - தொழில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்.
E - ஊழியர் செலவுக் கட்டுப்பாடு
மேற்காட்டியவற்றிலிருந்து மனிதவளத் திட்டத்திற்குரிய கருமங்களை உள்ளடக்கிய விடையினைத் தெரிவு செய்க.
(1) A, B, C (2) A, C, D (3) A, B, E (4) C, D, E (5) B, C, D (........)

**28.** மனிதவள முகாமைத்துவத்தில் தொழில் விபரத்திற்கும் தொழில் நியமத்திற்கும் பொதுவாகக் காணப்படும் முக்கியமான தகவலாக இருப்பது,
(1) கருமங்களின் தன்மையாகும் (2) பதவி வகிப்பவரின் தகைமைகளாகும் (3) அனுபவங்களாகும்
(4) பதவியின் பெயராகும் (5) சம்பளத் திட்டமாகும் (........)

**29.** பின்வரும் அட்டவணையின் X நிரலில் தகவல் முறைமையின் கருவிகளும், Y நிரலில் கருவிகளுக்குரிய உருப்படிகளும் தரப்பட்டுள்ளன.

| X கருவிகள் (பாகங்கள்) | Y உருப்படிகள் |
|---|---|
| A வன் பொருட்றொகுதி | 1. சட்ட திட்டங்களும் கொள்கைகளும் |
| B மென் பொருட்றொகுதி | 2. மைக்ரோசொப்ட் |
| C உயிரியல் தொகுதி | 3. மொனிடர் |
| D நிறுவன ரீதியான பாகம் | 4. செயற்பாட்டு முறை |
| E விதி முறைகள் | 5. வின்டோஸ் |

மேற்காட்டிய கருவிகளையும், அதற்குரிய உருப்படிகளையும் சரியாக இணைக்கும்போது கிடைக்கும் விடையாக இருப்பது,
(1) A - 3 B - 5 C - 4 D - 1 E - 2 (2) A - 3 B - 5 C - 4 D - 2 E - 1
(3) A - 5 B - 3 C - 2 D - 1 E - 4 (4) A - 3 B - 2 C - 4 D - 5 E - 1
(5) A - 3 B - 2 C - 1 D - 5 E - 4 (........)

**30.** வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கும் பிரிவுகள், துணைப்பிரிவுகள் பற்றி பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A நிறைவேற்றுச் சுருக்கம் | 1. காசுப்பாய்ச்சல் கூற்று |
| B சந்தைப்படுத்தல் திட்டம் | 2. மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் |
| C செயற்பாட்டுத் திட்டம் | 3. ஊழியர் தேவை |
| D மனிதவளத் திட்டம் | 4. வினியோகச் செலவு |
| E நிதித் திட்டம் | 5. பணிப்பாளர் குழுவின் விபரம் |

மேற்காட்டிய X, Y நிரலில் காட்டப்படும் தகவல்களை சோடிகளாக இணைக்கும்போது சரியான விடைத் தொகுதியாக அமைவது,
(1) A - 1 B - 2 C - 3 D - 4 E - 5 (2) A - 2 B - 3 C - 4 D - 5 E - 1
(3) A - 3 B - 1 C - 2 D - 4 E - 5 (4) A - 5 B - 4 C - 2 D - 3 E - 1
(5) A - 4 B - 3 C - 2 D - 1 E - 5 (........)

- **வினா இலக்கம் 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்பவும்.**

**31.** (அ) போட்டியாளர்களும், வழங்குனர்களும் .................................................................. சூழற்காரணிகளாக இருப்பதுடன், உரிமையாளர்களும், ஊழியர்களும் ............................................................ சூழற் காரணிகளுக்குரித்துடையவர்களாவர்.

(ஆ) வணிக நோக்கத்தினை மிகவும் தெளிவாக விளக்கி அதனை எழுத்து வடிவில் வெளிப்படுத்தும்போது அதனை ................................................................ என அழைப்பர்.

**32.** (அ) நுகர்வோர்களின் உரிமைகளை சட்டரீதியான வகையில் பிரகடனப்படுத்திய சனாதிபதி .............................................. ஆவார்.

(ஆ) 2012 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கைப்படி மொத்த அரச வருமானங்களில் கூடிய வீதத்தில் கிடைக்கப் பெற்றுள்ள வரி வகையாக இருப்பது, ....................................................................................................... ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க.

**33.** (அ) இலாபத்தினடிப்படையில் மாற்றமடையும் வட்டியினைப் பெற்றுக்கொள்ளும் பங்காளர்களை ....................................................................... எனும் பெயர் கொண்டழைப்பர்.

(ஆ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய தொழில்சார் பங்குடமையொன்றின் உச்ச பங்காளர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................................................................................................................


**34.** (அ) முயற்சியாளரொருவரின் பிரதான கருமமாக இருப்பது ........................................................................................................ ஆகும்.

(ஆ) வணிகங்களை சிற்றளவு, பாரியளவு வணிகங்களாகத் தீர்மானிப்பதற்கான அளவீட்டுக் கருவியைப் பொதுவாக எடுத்துநோக்கும்போது அதனை ............................................................................. எனவும் ................................................... எனவும் குறிப்பிட்டுக்காட்ட முடியும்.

**35.** (அ) பணத்தின் பிரதான பண்பினை ........................................................................................................................ எனக் குறிப்பிட முடியும்.

(ஆ) இரு வங்கிகளில் இரு கணக்குகளுக்கிடையே காசோலைகளின் மூலம் பரிமாற்றம் செய்யக்கூடிய உச்சத்தொகை ....................................................................... ஆகும்.

**36.** (அ) பின்வரும் அட்டவணையில் இடைவெளிகளுக்குரிய சொற்களைப் பயன்படுத்தி பூரணப்படுத்துக.





(ஆ) முதல்வர் சார்பாக பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது அல்லது விற்பனை செய்யும்போது அக்கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளும் முகவர் .................................................................. எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுவார்.

**37.** (அ) அமைப்பொன்றின் அக, புறச் சூழல் தொடர்பாகக் காணப்படும் விளக்கம், பிரச்சினைகளை இனங்காணலும் அவற்றைத் தீர்ப்பதற்குமான இயலுமை, தூர நோக்குடன் தீர்மானமெடுத்தல் போன்றவைகள் தொடர்பாக நுட்பமாகச் சிந்தித்தல் முகாமையாளரொருவரிடம் இருக்கவேண்டிய ........................................................................ திறன் என்றழைக்கப்படும்.

(ஆ) அமைப்பொன்றின் முகாமையாளருக்குச் சட்டரீதியாக கிடைக்கும் உரிமை ............................................................ என்றழைக்கப்படும்.

**38.** (அ) வியாபாரக்குறி பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பது பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வமாக ....................................... ............................................................................................ மூலம் அறிவித்தல் கொடுக்கப்படும்.

(ஆ) கைத்தொழிற் பொருட்களை விநியோகிக்கும் வழிமுறைகளைக் காட்டும் பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இடவும்.



**39.** (அ) திட்டமிடுதலின் போதும் தீர்மானம் எடுத்தலின் போதும் பயன்படுத்தப்படும் அக (உள்ளக) நிதி மதிப்பீட்டினை .................................................................................. எனக் குறிப்பிட முடியும்.

(ஆ) நிதி முறைமையின் சிறந்த செயற்பாட்டுத்தன்மையினையும், நிலைப்புத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு துணையாக அமையும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை ...................................................................... என்பதனுள் உள்ளடக்கப்படும்.

**40.** (அ) யாதேனும் தொழிலொன்றுக்குரிய (1) ..........................................................................., (2) ..........................................................................., (3) ..............................................................., (4) ....................................................... என்பவற்றை விவரிக்கும் கூற்று தொழில் விபரம் என்றழைக்கப்படும்.

(ஆ) தொழில் வழங்குனரினால் தனது தொழில் எந்தளவு தூரத்திற்குச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டள்ளது என்பதனைச் தேடியறிந்து அறிக்கைப்படுத்தும் செயன்முறை .................................................................. என்றழைக்கப்படும்.

● **வினா இலக்கம் 41 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை வழங்கவும்.**

**41.** (அ) கைத்தொழிற் புரட்சியுடன் வணிகத்துறையில் இணைந்த **இரண்டு** துணைச் சேவைகளைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................................

(ஆ) ஒருவரிடம் காணப்படும் உற்பத்திப பொருளொன்றை மற்றோர் நபருக்கு உரிமையுடன் பரிமாற்றம் செய்யும் முறையானது எப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றது?

..........................................................................................................................................................................

**42.** (அ) வணிக சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் (USA) தேசிய வரைவிலக்கணம் யாது?

..........................................................................................................................................................................

(ஆ) சர்வதேச நுகர்வோர் தினம் எப்போது?

..........................................................................................................................................................................

**43.** முயற்சியாண்மைக்குரிய செயற்பாடுகள் மற்றும் பண்புகளிற் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. திட்டமிடல் | 2. செயலுருப்படுத்துதல் | 3. புத்துருவாக்கம் |
| 4. வாய்ப்புக்களைத் தேடிச் செல்லல் | 5. செயற்படுத்துவதற்குத் தேவையான பின்னணி | 6. விருத்தி |
| 7. தன்னம்பிக்கை | 8. நெகிழும் தன்மை கொண்டது | |

இவற்றிலிருந்து முயற்சியாண்மைச் செயற்பாடுகளுக்குரிய செயன்முறைகளை மட்டும் எழுதிக்காட்டுங்கள்.

..........................................................................................................................................................................

**44.** பங்குடைமை வணிகம் தொடர்பாக பின்வரும் கருமங்களுக்குரிய சட்டங்களை எதிரே எழுதிக் காட்டுங்கள்.

1. ரூ. 1000 த்திற்கு மேற்பட்ட மூலதனத்தை ஈடுபடுத்தல் : ..............................................................................
2. இலாப நட்டத்தைப் பகிர்தல் : ..................................................................................................................
3. உச்ச பங்காளர்களின் எண்ணிக்கை : .......................................................................................................
4. பொதுப் பெயரொன்றில் நடாத்திச் செல்லல் : ...........................................................................................

**45.** (அ) இந்நாட்டு திறைசேரிப் பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்நாட்டு வணிக வங்கிகளில் இலங்கை நாணயமான ரூபாய்களில் ஆரம்பிக்கக்கூடிய கணக்கின் பெயரைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................................

(ஆ) மிலங்கா விலைச் சுட்டெண்ணிற்குப் பதிலாக அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விலைச் சுட்டெண் எப்பெயர் கொண்டழைக்கப்படுகிறது?

..........................................................................................................................................................................

**46.** (அ) பாடசாலை மாணவர்கள் சார்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர் சவாரி (சிசு சரிய) பேருந்துச் சேவையின் மேற்பார்வை, நெறிப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................................

(ஆ) புதிய தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................................................

[பக். 8 ஐப் பார்க்க.

**47.** (அ) உற்பத்தி நிறுவனமொன்றின் உற்பத்திச் செயன்முறையை விருத்தி செய்வதற்கும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் கணினித் தொழில்நுட்ப முறை எப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றது?

.................................................................................................................................................................

(ஆ) மறு கட்டளை மட்டம் 6 000 அலகுகள்
இழிவு இருப்புப் பயன்பாடு 2 000 அலகுகள்
இழிவுக் கட்டளைக் காலம் 02 மாதங்கள்
உச்ச கட்டளைக் காலம் 03 மாதங்கள்
மறு கட்டளைத்தொகை 10 000 அலகுகள்

உச்ச இருப்பு மட்ட அளவினைக் கணிக்கவும்.

.................................................................................................................................................................

**48.** (அ) யாதேனும் பொருளொன்றை அல்லது சேவையொன்றைத் தொடர்ந்து கொள்வனவு செய்யும், பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய சந்தை எது?

.................................................................................................................................................................

(ஆ) எவரேனும் உற்பத்தியாளரொருவரினால் சந்தையில் முன்வைக்கப்படும் பண்டமொன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய **இரு** விடயங்களைக் குறிப்படவும்.

.................................................................................................................................................................

**49.** (அ) பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் "தீர்ப்பனவுத் திகதி" என்றால் என்ன?

.................................................................................................................................................................

(ஆ) கொழும்புப் பங்குச் சந்தை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒழுங்கு முறைமைப்படுத்தலுக்குமாக பாராளுமன்ற சட்டத்தினடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

.................................................................................................................................................................

**50.** (அ) யாதேனும் நிறுவனமொன்றிற்குரிய செயற்பாட்டு நிலையத்துள் (வேலைப்பகுதி) (working Sites) தொடர்புறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கணினித் தொடர்பு எது?

.................................................................................................................................................................

(ஆ) இணையத்தளங்களில் காட்சிப்படுத்தப்படும் (வெப்தளங்களில்) கோவைகளைப் (file) பிரதிசெய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் தொழில்நுட்பம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

.................................................................................................................................................................

***

## க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2014

**வணிகக் கல்வி II** | மூன்று மணித்தியாலங்கள்

**கவனிக்கவும் :**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது **இரண்டு** வினாக்கள் வீதம் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி I

**1.** (i) 'கற்பக இல்லமானது' சகல வசதிகளும் கொண்ட நகரத்தின் பாரிய நிலப்பரப்பில் அதிநவீன உபகரணங்கள் மற்றும் வினைத்திறனான பணியாளர் குழுவொன்றினையும் உள்ளடக்கிய பிரசித்திபெற்ற வைத்தியசாலையொன்றாகும்

(அ) இவ்வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவையின் தன்மையினைக் குறிப்பிடவும். (02 புள்ளிகள்)

(ஆ) பொருட்கள், சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகள் யாவை? (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிகமொன்றின் இலக்குகள் (நோக்கங்கள்) 4 இனைக் குறிப்பிட்டு அதனை சுருக்கமாக விளக்கவும். (02 புள்ளிகள்)

(ஆ) "தற்கால வணிகங்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு நடாத்தப்படுகின்றது" தெளிவுபடுத்துக. (02 புள்ளிகள்)

(iii) "வணிக வளர்ச்சிப்போக்கில் கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட தாக்கமானது ஒரு சிறிய விடயமென்றுக் கூற முடியாது"

(அ) கைத்தொழிற் புரட்சியானது உற்பத்தி, வியாபாரத் துறைகளில் ஏற்படுத்திய தாக்கங்களை வெவ்வேறாகத் தெளிவுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் வர்த்தகத்தினூடாக நுகர்வோர்களுக்கும் வணிகர்களுக்கும் கிடைக்கும் அனுகூலங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களின் தாக்கங்கள் அதிகரித்தவண்ணம் உள்ளன.

(அ) வணிக நிறுவனமொன்றின் செயற்பாடுகளில் சூழல் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்களும் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றார்கள் என்பதை வெவ்வேறாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வேலைப் பகிர்விற்கும், சிறப்புத் தேர்ச்சிக்குமிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) முதலாம் நிலை உற்பத்தியின் விளைத்திறனில் இரண்டாம் நிலை உற்பத்தியானது எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) 2012 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கமைய படி மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாய கைத்தொழில், சேவைத் துறைகளின் பங்களிப்பினைக் (வீதங்களில்) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**2.** (i) நாடொன்றின் அரசாங்கமானது பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றும்போது பயன்படுத்தும் எண்ணக்கருக்களில் சில கீழே தரப்பட்டுள்ளன. அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விடயங்களை வெவ்வேறாக விளக்குக.

(அ) பொருளாதார வினைத்திறன் (ஆ) பூரண வேலைவாய்ப்பு மட்டம்

(இ) பொருளாதார வளர்ச்சி (ஈ) பொருளாதாரச் சுதந்திரம் (04 புள்ளிகள்)

(ii) (அ) இலங்கை மத்திய வங்கியானது நாட்டின் நிதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது பயன்படுத்தும் அளவு ரீதியான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவிகள் **இரண்டினைப்** பெயரிடவும். (01 புள்ளி)

(ஆ) நுகர்வோர்கள் தொடர்பாக சர்வதேச ரீதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள நுகர்வோர்களின் உரிமைகளைக் குறிப்பிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(இ) நிகழ்காலச் சந்தையில் நுகர்வோர்களுக்குப் பல்வேறு அசாதாரண வியாபார ஒழுங்குமுறைகளுக்கும் அபாயகரமான நிலைமைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையிலுள்ள நுகர்வோர்களைப் பாதுகாப்பது தொடர்பில் அரசு நடைமுறைப்படுத்தும் பிரதான சட்டத்தினை குறிப்பிடவும். (01 புள்ளி)

(iii) (அ) தனியாள் உடமை வணிகத்துடன் ஒப்பிடும்போது பங்குடமை வணிகமொன்றில் காணக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கூட்டுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் நேரடியாகத் தொடர்புபடும் நிறுவனங்கள் **நான்கின்** பெயரினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) ஆகில் தனது தந்தை நடாத்திச்சென்ற சில்லறை விற்பனை நிலையத்தினை தனது நண்பனான குமாருடன் இணைந்து வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

(அ) அதனை எச்சட்டத்தின் கீழ் எந்நிறுவனத்தில் பதிவுசெய்ய வேண்டும் எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

/பக். 2 ஐப் பார்க்க.

(ஆ) இதனை உருவாக்குவதன் மூலம் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் **இரண்டினையும்**, பிரதிகூலங்கள் **இரண்டினையும்** குறிப்பிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(v) (அ) அங்கீகார வணிகங்களானவை உலகம் முழுவதிலும் வியாபித்தும் பிரபல்யமடைந்தும் செல்லும் போக்கு தற்போது காணப்படுகின்றது. இவ்வாறு பிரபல்யமடைவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) அங்கீகார வணிகங்களின் வகைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**3.** (i) இலங்கையின் பொருளாதார விருத்திக்கு முயற்சியாண்மையின் தேவைப்பாட்டினை விளக்கவும். (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் சிற்றளவு வணிகங்களுக்கே உரித்தான பண்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உயர்தரத்திற்கு தோற்றிய சகீனாவிற்கு அழகுக்கலை நிலையமொன்றை ஆரம்பிக்கும் எதிர்பார்ப்பொன்று இருந்தது. இதற்காக அப்பிரதேசத்தில் காணப்படும் வணிக வங்கியொன்று கடன் வசதியை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. ஆயினும், அவர் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அச்சப்பட்டார். இலங்கை மத்திய வங்கியின் "ஆலோசனைச் சேவை" யின் கடன் ஆலோசனைப் பிரிவினூடாக தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆசிரியரொருவர் அவருக்கு வழிகாட்டினார். அவ்வாலோசனைச் சேவை சகீனாவிற்கு எவ்வாறு முக்கியத்துவமானது என்பதனை விளக்கவும். (04 புள்ளிகள்)

(iv) (அ) ராஜா பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வானொன்றின் சாரதியாவார். இவர் தானே "பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை" ஒன்றை ஆரம்பிப்பதற்கு மோட்டார் வானொன்றைக் குத்தகையடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு எண்ணுகின்றார். குத்தகை முறையினால் ராஜாவிற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) குத்தகை ஒப்பந்த வகைகளைப் பெயரிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(v) (அ) கடனட்டையானது (Credit Card) பிரபல்யமாவதற்குத் தடையாக அமையும் காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கடனட்டைப் (Credit Card) பயன்பாட்டினூடாக வணிகர்களுக்குக் கிடைக்கும் **அனுகூலங்கள், பிரதிகூலங்கள்** எவை? (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**4.** (i) நிஹால், டேவிட் ஆகியோரினால் சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி வணிகமானது இன்று பாரிய ஆடைத் தொழிற்சாலையொன்றாக மாறி உள்ளது. இதன்போது அவர்கள் முகம் கொடுக்கும் இடர்கள் **நான்கினையும்** அவற்றிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதிகள் **நான்கினையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) பொருட்களை ஏற்றிச் செல்வதில் ஈடுபடும் கப்பலொன்று எண்ணெய்க் கசிவு காரணமாக உரிய பிரயாணப் பாதையை மாற்றிப் பயணிக்கும்போது விபத்துக்குள்ளானது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்ள முடியுமா? உங்களது விடைக்கான காரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) செயற்றிறன் கொண்ட தொடர்பாடலானது வணிகங்களின் நீடித்த வாழ்விற்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் எவ்வாறு துணையாக அமையும் என்பதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) வெள்ளி, இரத்தினங்களிலான ஆபரணங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கு எண்ணியுள்ள நிஹால் அதற்குத் தேவையான வழிகாட்டலை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார். அப்பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் போக்குவரத்துத் துறையின் அண்மைக்காலப் போக்கொன்றாக அதிவேகப் பாதை எனும் எண்ணக்கரு வியாபித்துக் காணப்படுகின்றது. வணிகக் கல்வியைக் கற்றவர் எனும் வகையில் வணிக ரீதியான தொலைநோக்கில் அதிவேகப் பாதை தொடர்பான மதிப்பீடொன்றைச் செய்யுங்கள். (04 புள்ளிகள்)

(v) (அ) வெளிநாட்டு வியாபாரத்தின் விருத்திக்கு எதிராகத் தாக்கம் செலுத்தும் காரணிகளை பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தின் விருத்திக்கு எதிராகவுள்ள தடைகளை இழிவுபடுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச அமைப்புக்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

# பகுதி II

**5.** (i) (அ) ஹென்றி மினஸ்பர்க் (HENRY MINTZBERG) வகைப்படுத்தலுக்கமைய முகாமைத்துவக் கருமங்களை வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) முகாமையாளரொருவர் எனும் வகையில் விருத்திசெய்து கொள்ள வேண்டிய பொதுவான திறன்களையும், விசேட திறன்களையும் வெவ்வேறாகக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பாடசாலையொன்றில் வெற்றிகரமான முகாமைத்துவமொன்றைப் பேணிச் செல்வதற்கு ஜனநாயக தலைமைத்துவப் பாணியா அல்லது சர்வாதிகார தலைமைத்துவப் பாணியா முக்கியத்துவமுடையதாக இருக்கின்றது என்பதனைக் காரணங்களுடன் விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முகாமைத்துவச் செயல்முறையின் அடிப்படைக் கருமங்களைக் குறிப்பிட்டு அவற்றிற்குரிய துணைக்கருமங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) திட்டமிடலின் அடிப்படைகள் **நான்கினைக்** குறிப்பிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

(ஆ) திணைக்களப்படுத்தக்கூடிய **நான்கு** அடிப்படைகளை தெளிவுபடுத்துக. (02 புள்ளிகள்)

(iv) (அ) தொகுதி, பாய்ச்சல் உற்பத்திகளில் **இவ்விரண்டு** பண்புகளை வெவ்வேறாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) செயற்பாட்டு நடைமுறையில் பயன்படுத்தப்படும் புதிய தொழிநுட்ப முறைகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) உற்பத்திக் கட்டுப்பாட்டின் **நான்கு** துறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திப் பொருளொன்றின் தரத்தினைப் பரிசோதிப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**6.** (i) (அ) விளைத்திறன் என்பதன் மூலம் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) விளைதிறனை மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் சமன்பாட்டினைக் குறிப்பிட்டு அதன் மூலம் பெறப்படும் விடையினை மதிப்பீட்டிற்குட்படுத்தப்படும் முறையினையும் விளக்கவும். (02 புள்ளிகள்)

(ii) உற்பத்தி நிறுவனமொன்றில் தேவைக்கதிகமான அளவில் சரக்குகளை வைத்திருப்பதனால் முகம் கொடுக்க வேண்டியுள்ள **பாதகமான** நிலைமைகள் **நான்கினைத்** தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) (அ) வணிகமொன்றின் இலக்கினை அடைந்து கொள்வதற்காகச் சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளுக்கிடையே காணப்படும் உள்ளக ரீதியான தொடர்புகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) மேம்படுத்தல் கலவையின் கருவிகள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிதுக. (02 புள்ளிகள்)

(iv) நிதி முகாமைத் தீர்மானங்களை பாய்ச்சல்கோட்டு அட்டவணையின் மூலம் விபரிக்க. (02 புள்ளிகள்)

(v) (அ) எந்தவொரு வணிக அமைப்பாயினும் தேவையான நிதியின் அளவினை முன்னுணர்தல் முக்கியமானதாகும். பொருத்தமான நிதியீட்டல் வழிமுறைகளைத் தீர்மானிக்கும்போது முகாமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற நேர்முறை, நேரில் முறையிலான நிதியீட்டல் வழிமுறைகள் **இவ்விரண்டு வீதம்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக நிறுவனமொன்றில் நிதிக்கூற்றுப் பகுப்பாய்வின் மூலம் இனங்காணக்கூடிய பிரதான துறைகளை குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**7.** (i) (அ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய அகரீதியான நிதியீட்டல் வழிமுறைகள் **மூன்றினைப்** பெயரிடவும். (02 புள்ளிகள்)

(ஆ) கலப்பு நிதியம் (கலவை நிதியம்) (Hybrid Finance) எனக் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) (அ) கொழும்புப் பங்குச் சந்தையின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பங்கிலாபத்தினைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ளும் காரணிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) வணிக நிறுவனமொன்றுக்கான எதிர்கால மனிதவளத் தேவையினை எதிர்வுகூறும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றை விளக்கவும். (04 புள்ளிகள்)

/பக். 4 ஐப் பார்க்க.

(iv) (அ) நீங்கள் ஆடைத் தொழிற்சாலையொன்றின் மனிதவள முகாமையாளரொருவராயின் நிறுவனத்திற்குப் பெண் ஊழியர்களைச் சேர்ப்பதற்கான தொழில் அறிவித்தலொன்றை வெளியிடும்போது அதில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர்களை இணைத்துக் கொள்ளும்போது நேர்முகப் பரீட்சைக்குழுவானது எவ்வாறான முறையில் ஆயத்தமாதல் வேண்டும்? (02 புள்ளிகள்)

(v) வணிக நிறுவனமொன்றில் வேலை கொள்வோருக்கும், வேலை வழங்குனர்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு பேணப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

**8.** (i) தரவு தயாரித்தல் செயன்முறையின் கருமங்களைக் குறிப்பிட்டு விளக்கவும். (04 புள்ளிகள்)

(ii) கணினி வலையமைப்பொன்றில் (Computer Network) கணினிகள் ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ள முறைமைக்கமைய வலையமைப்பு வகைகள் பலவற்றை இனங்காணமுடியும். வலையமைப்பு வகைகள் **நான்கினைப்** பெயரிட்டு அவற்றை விளக்கவும். (04 புள்ளிகள்)

(iii) பல்வேறு அமைப்பு மட்டங்களிலும் பயன்படுத்தப்படும் பிரதான தகவல் முறைமைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அம் முறைமையினைப் பயன்படுத்தும் பிரிவினர்களையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) "வணிகத்தின் உள்ளகத் தேவையினை நிறைவேற்றுவதற்காக மட்டும் வணிகத்திட்டமொன்று தயாரிக்கப்படுவதில்லை" இதனை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத்திட்டமொன்றின் நிறைவேற்றுச் சுருக்கத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) வணிகத்திட்டமொன்றின் உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டமொன்றின் நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடவும்.

(02 புள்ளிகள்)

(மொத்தப்புள்ளிகள் 20)

***